### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. மனத்தை அதன் போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

16. 'தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே' - தொடருக்குப் பதவுரை எழுதுக.

17. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



18. அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?

21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

தாமரை இலை நீர்

23. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?

24. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக**

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

25. **பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**

அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.

ஆ) போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.

26. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) நகை ஆ) இடிந்து

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக**

அ) Teller ஆ) Mobile Banking

**28. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) பனங்காட்டில் நரி ஊளையிடுகிறது.

ஆ) ஓவியர் புனைந்த ஓவியத்தில் வண்ணம் தீட்டினர்.

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) தலைக்கோல் ஆ) உரனுடை

**30.** படிமத்தின் அடிப்படைக் கூறுகள் யாவை?

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

32. 'எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது குறள் வழி விளக்குக.

33. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு', இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

35. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே
– நன்னூல்

மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே ! கூவி வா, வா!
– சிற்பி பாலசுப்பிரமணியம்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

37. இந்தோ- சாரசனிக் கட்டடக்கலை விளக்குக.

38. மீட்டுருவாக்க பணியில் மயிலையாரின் பங்கு யாது?

39. 'உப்பிட்ட வரை உள்ளளவும் நினை' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

41. வேற்றுமை அணி (அல்லது)

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று அணியை விளக்குக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

பூமிச்சருகாம் பாலையை
　　முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
　　புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
　　இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
　　விறகெரிக்க வீசுவேன் 　　　　　　- நா. காமராசன்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



43. **கார்மேகம்** அல்லது **மழை** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

**பகுதி - IV**

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக,

**(அல்லது)**

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவானவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு விளக்குக.

**(அல்லது)**

ஆ) திரைப்படத் துறையில் சார்லி சாப்ளினின் பங்கினை விளக்குக.

46. அ) ‘உரிமைத்தாகம்’ கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**(அல்லது)**

ஆ) “கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன’’ - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

**பகுதி - V**

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6=6**

1. அ) ‘ஒருமையுடன்’ - எனத் தொடங்கும் ‘தெய்வமணிமாலை’ என்ற பாடல்.

ஆ) ‘சுடும்’ என முடியும் குறள்.

☯☯☯☯☯

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ள கூடியவர்
2. ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
3. இ) தமது அடையாளத்தை
4. ஆ) மணல் அள்ளுதல்
5. இ) கடுக்காய்
6. அ) புறநானூறு
7. ஆ) செப்பலோசை
8. ஆ) நடைமேடை
9. இ) 4, 3, 1, 2
10. இ) சொல்லிசை அளபெடை
11. அ) 4, 1, 2, 3
12. அ) எத்திசை
13. ஆ) பிரெஞ்சு அரசு
14. ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழிகள் மூலம் விளக்குவது

### பகுதி - II

15. • மனத்தை, அது போகும் போக்கில் செல்லவிடக் கூடாது.
    • மேலும் மனத்தினைத் தீமை வழியிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவது அறிவாகும்.
16. அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தக்கோட்டத்துக் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே!
17. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



18. தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்.

19. • நடைபெற்றியலும் என்றும் நடை நவின்றொழுகும் என்ற சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
   • கவிதையின் இயங்காற்றல்தான் நடை என்கிறது தொல்காப்பியம்.
   • மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதே நடை எனப்படும்.

20. சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்றவை கார்பன் அற்ற ஆற்றல்கள் எனப்படும்.

21. • திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொணர உதவுவது பின்னணி இசையே.
   • பின்னணி இசைச் சேர்ப்பு, மவுனம் இவ்விரண்டும் சில வேளைகளில் திரையில உணர்வுகளை வெளிக்கொணர உதவுகின்றன.
   • இசை பாத்திரங்களின் மனக்கவலைகள் அலைக்கழிப்புகள் ஆகியவற்றை எதிரொலிப்பதாகவும் இருத்தல் அவசியமானது.

22. பெற்றோருக்கு நிதிச்சுமை அழுத்துவது தெரிந்தும், சில பிள்ளைகள் தாமரை இலை நீர் போலக் கண்டு கொள்ளாமல் இருப்பர்.

23. • இப்பாடலடிகளில் மெய் (வடிவப்) படிமம் வெளிப்படுகிறது.
   • மாந்தோப்பு பருவ காலத்தின் அழகு பட்டாடையாக மரத்தைப் போர்த்தியிருப்பது பூக்களும் தளிர்களும் பட்டாடையை உடுத்திய பெண்ணின் தோற்றத்தை அல்லது பூத்திருக்கும் மரத்தின் தோற்றத்தோடு ஒப்பிட்டுள்ளது.

24. மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnpsc



25. அ) மாறனின் பேச்சுத்திறனை யார் வெல்ல முடியும்.

ஆ) போட்டியில் வெற்றி பெற்றதற்காக கலைச் செல்விக்குப் பாராட்டுகள் குவிந்தன.

26. அ) நகை = நகு + ஐ

நகு - பகுதி (நகை ஆனது விகாரம்), ஐ - தொழிற்பெயர் விகுதி

ஆ) இடிந்து = இடி + த்(ந்) + த் + உ

இடி - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

27. அ) விரைவுக் காசாளர்

ஆ) அலைபேசி வழி வங்கி முறை

28. அ) பனங்காட்டில் நரி ஊளையிடுகிறது.

ஆ ஓவியர் புனைந்த ஓவியத்தில் வண்ணம் தீட்டினர்.

29. அ) தலைக்கோல் = தலை + கோல்

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி தலைக்கோல் என்று புணர்ந்தது.

ஆ) உரனுடை = உரன் + உடை

உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவதே இயல்பு என்ற விதிப்படி = (ன் + உ) = னு உரனுடை என்று புனர்ந்தது.

30. வினை, பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்).

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



# மாதிரி வினாத்தாள் - 5

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. 'உவா உற வந்து கூடும**
**உடுபதி, இரவி ஒத்தார்' - யார் யார் ?**

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

**2. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?**

அ) வான்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

**3. அதிசிய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது**

அ) கடந்தகாலத் துயரங்களை
ஆ) ஆட்கற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை
ஈ) அனைத்தையும்

**4. சேரநாட்டு மருமக்கள் தாயமுறை பற்றிக் கூறும் நூல்**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



இ) பரிபாடல் ஈ) பட்டினப்பாலை

5. **பொருத்துக:**

அ) தமிழ் அழகியல் - 1. பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2. தி.சு. நடராசன்
இ) கிடை - 3. சிற்பி. பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4. கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3
இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

6. **கூவம் ஆற்றை .................. என்றும் அழைத்தனர்.**

அ) வடபழனி ஆறு ஆ) திருவல்லிக்கேணி ஆறு
இ) மாதவரம் ஆறு ஈ) பல்லாவரம் ஆறு

7. **'பஞ்சகாப்பியம்' என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட நூல்**

அ) நன்னூல் ஆ) தமிழ்விடுதூது
இ) பொருள்தொகை நிகண்டு ஈ) திருத்தணிகை உலா

8. **Fiction என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**

அ) புனைவு ஆ) சட்டம்
இ) ஆவணம ஈ) கோப்பு

9. **சரியான தொடரைக் கண்டுபிடி.**

அ) ஆண்டுதோறும் மறைந்த தி. ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்.
ஆ) மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்.
இ) தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் மறைந்த கூட்டம் நடைபெறும்.
ஈ) மறைந்த நினைவாக தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்

10. **அறிவும் புகழும் - என்பதன் இலக்கணக்குறிப்பு**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) தொழிற்பெயர் ஈ) எண்ணும்மை

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**11. சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.**

அ) "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது'' என்று கூறினான்.

ஆ) மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்.

இ) ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

ஈ) இவற்றுள் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.

**12. 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி அமைந்த சொல்**

அ) கொடுங்கோல   ஆ) புதுப்பெயல

இ) வலனேற்ப   ஈ) கண்ணுடைய

**13. 'உரிமைத்தாகம்' என்னும் சிறுகதை எடுத்துரைப்பது**

அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை

ஆ) வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகள்

இ) முதலாளித்துவம் தொழிலாளிகளை நசுக்குவதை

ஈ) இவற்றில் எதுவுமில்லை

**14. பாட்டும் உரைநடையும் கலந்து பல்வகைச் செய்யுள்களில் அமைந்தது**

அ) கம்பராமாயணம்   ஆ) சிலப்பதிகாரம்

இ) குண்டலகேசி   ஈ) வளையாபதி

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15. ஞானத்தில் பெரியது எது?

16. வசனம், கவிதை வேறுபாடு தருக.

17. 'பெருங்கடல் வேட்டச்சத்துச் சிறு குடிப்பரதவர்' - தொடரில் உள்ள முரண் நயதைக் குறிப்பிடுக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



18. எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால்உள்ளமனிதர்களின்உழைப்பைநாம்சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19. பாடலின் தளத்தை ஏர் நடத்தி பண்படுத்திப் போகின்றவை எவை?

20. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை ?

21. “விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்’ யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக :**

கிணற்றுத் தவளை போல

23. காப்பியத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை ?

24. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக.**

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையான வற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

25. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) தளைமை ஆசிரியர் தேசியக்கொடியை ஏர்றி வைத்தார்.
ஆ) பல்லியில் இளக்கிய மண்ற விழா நடை பெற்றது.

26. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) உயர்ந்தோர் ஆ) சாய்ப்பான்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக**

அ) Bibliography ஆ) Platform

**28. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) உன்னையல்லால் ஆ) நன்றல்லது

**30.** காற்புள்ளி இடாமல் எழுதுவதானல் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. 'நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்'' - இக்கவிதையின் அடி, 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33. சிற்றினம் சேராமையும் நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.

34. தலைக்கோல் அறிவை - விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36. பண்டையக் கல்வி முறையில் 'மனனம்' என்பது எளிதான ஒன்றாக இருக்கக் காரணம் என்ன என்பதை விளக்குக.

37. காட்சி ஆற்றல் என்பதை விளக்குக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



38. சங்ககாலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக இருந்ததற்குச் சான்று தந்து விளக்குக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. 'அனுபவமே சிறந்த ஆசான்' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

41. பொருள் வேற்றுமையணி (அல்லது)
எடுத்துக்காட்டு உவமை அணியை சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

– நாமக்கல் கவிஞர்

43. **'இயற்கை'** அல்லது **'நட்பு'** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும். இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

**(அல்லது)**

ஆ) எண்வகை மெய்ப்பாடுகளை இலக்கியச் சான்றுடன் விளக்குக.

45. அ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

**(அல்லது)**

ஆ) சார்லி சாப்ளியின் 'தி கிரேட் டிக்டேட்டர்' கதையைச் சுருக்கி வரைக.

46. அ) "சொல்லோவியங்கள்" (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

**(அல்லது)**

ஆ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

1. அ) 'ஓங்கலிடை' - எனத் தொடங்கும் தன்னேரில்லாத தமிழ் எனும் பாடல்.

ஆ) 'அது' என முடியும் குறள்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. இ) இராமன், சுக்ரீவன்
2. ஈ) தீயினத்தார்
3. ஈ) அனைத்தையும்
4. ஆ) பதிற்றுப்பத்து
5. ஈ) 2, 3, 4, 1
6. ஆ) திருவல்லிக்கேணி ஆறு
7. ஆ) தமிழ்விடுதூது
8. அ) புனைவு
9. ஆ) மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்.
10. ஈ) எண்ணும்மை
11. அ) "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது ; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது ; என் பிறவி ஒழிந்தது" என்று கூறினான்.
12. இ) வலனேற்பு
13. அ) நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்துவதை
14. ஆ) சிலப்பதிகாரம்

### பகுதி - II

15. ஒருவர் நமக்கு உரிய காலத்தில் செய்த உதவியானது அளவில் சிறியதாக இருந்தாலும், அஃது உலகைவிடப் பெரியதாகும்.
16. **வசனம்:**

    எதுகை, மோனை சேர்க்காமல், அடி என்ற அளவு இல்லாமல் எழுதுகின்ற வடிவம் வசனமாகும்.

    **கவிதை:**

    எதுகை, மோனை சேர்க்க வேண்டும். அடிக்கென்று எல்லை வைத்து எழுதப்படுவதே கவிதையாகும்.
17. பெருங்கடல் – சிறுகுடிப் பரதவர்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



18. • 'நாம் உழைக்கின்றபோது உழைப்பின் சுவையை 'நா' அறியாது.
    • ஆனால் தேநீரைப் பருகும்போது அதன் சுவையை 'நா' உணர்வது மட்டுமல்லாமல் உடல புத்துணர்ச்சி பெற்று நம் மனதை சிந்திக்கத் தூண்டுகிறது.
    • அதாவது நம் தாய் நமக்கு முன்னர் காலையில் எழுந்து தேநீருக்குத் தேவையானவற்றைத் தயார் செய்து கொடுக்கும் தாயாரின் உழைப்பை நாம் சிந்திக்கிறோம்.
19. ஒலிக்கோலம், சொற்புலம், சொற்றொடர் நிலை.
20. • **தமிழில்** : நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள்.
    • **கணிதத்தில்** : கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள்.
    • 'தலைகீழ்ப்பாடம்' என்ற முறையும் உண்டு.
    • ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற அகராதி வடிவில் அமைந்த நூல்கள் நினைவாற்றலை வளர்க்க உதவின.
21. • பாவேந்தர் பாரதிதாசன் வேங்கடசாமியைப் பற்றிக் கூறுகிறார்.
    • தமிழ் கெட நேர்ந்த போது தமிழ்ப்பணியை உயிர்ப் பணியாகக் கொண்டு தமிழரின் மேன்மையை ஓங்கிடச் செய்தல் வேண்டும் என்று கூறுகிறார்.
22. வெளி உலகம் தெரியாத நிலை இன்னும் சில கிராமங்களில் மக்கள் கிணற்றுத் தவளை போல வாழ்கின்றனர்.
23. • பொருட்டொடர் நிலைச் செய்யுள் ,விருத்தச் செய்யுள் , கதைச் செய்யுள் , மகாகாவியம்
    • அகலக் கவி, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.
24. ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்று கொடுக்கும்.
25. அ) தலைமை ஆசிரியர் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.
    ஆ) பள்ளியில் இலக்கிய மன்ற விழா நடைபெற்றது.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnpsc



26. அ) உயர்ந்தோர் = உயர் + த்(ந்) + த் + ஓர்

உயர் - பகுதி, த்(ந்) - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்த கால இடைநிலை, ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

ஆ) சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்

சாய் - பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை, ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

27. அ) வாழ்க்கை வரலாறு ஆ) நடைமேடை

28. அ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை வேய்ந்தான்.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையும், யானைக் குட்டியும் கண்டேன்.

29. அ) உன்னையல்லால் = உன்னை + அல்லால்

- இஈஐ வழி யவ்வும் என்ற விதிப்படி, உன்னை + ய் + அல்லால் என்றானது.
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ய் + அ = ய) உன்னையல்லால் எனப் புணர்ந்தது.

ஆ) நன்றல்லது = நன்று + அல்லது

- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி. நன்ற் + அல்லது என்றானது
- 'உடல்மேல் உயர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, (ற் + அ = ற) 'நன்றல்லது' என்று புணர்ந்தது.

30.
- எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ, தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறு பொருளைத் தரும்.
- **சான்று:** அவன், அக்கா வீட்டிற்குச் சென்றான், அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றான்.

☯☯☯☯☯

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



# மாதிரி வினாத்தாள் - 6

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. **பொருத்துக.**

அ) குரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4. மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 4, 2
இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

2. **“மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது, தன்னோர் இலாத தமிழ்!” – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**

அ) அடிமோனை, அடி எதுகை
ஆ) சீர்மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர்மோனை
ஈ) சீர்எதுகை, அடிமோனை

3. **‘‘காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை’’ – இத்தொடரில் ‘கலன்’ உணர்த்தும் பொருள்**

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி
இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

**4. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்கு மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது**

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

**5. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு.வரதராசனார்
ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் – 2. மயிலை. சீனி. வேங்கடசாமி
இ) தமிழ் தென்றல் – 3. திரு.வி.க.
ஈ) மொழி ஞாயிறு – 4. தேவநேயப்பாவாணர்

**6. 'அக்ஷராப்பியாசம்' என்றால்**

அ) பாடம்படித்தல் ஆ) எழுத்தறிவித்தல்
இ) மனனம் செய்தல் ஈ) ஏடு எழுதுதல்

**7. 'அந்தாதி இலக்கியங்கள்', செய்யுள் வகைகளில் ................ சான்றாக அமைகின்றன.**

அ) பொருள்தொடர்நிலைக்கு ஆ) சொல்தொடர்நிலைக்கு
இ) தொகைநிலைக்கு ஈ) முத்தகத்துக்கு

**8. Sound Effect – என்பதன் தமிழ்ச்சொல்**

அ) கவின் கலைஞர் ஆ) ஒலி விளைவு
இ) ஒளிப்பதிவு ஈ) செய்திப்படம்

**9. சரியான தொடரைக் கண்டறிக.**

அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.
ஆ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளன.
இ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.
ஈ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளன.

**10. தொல்நெறி, ஆடலும் பாடலும் – இச்சொற்களுக்குரிய இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.**

அ) வினைத்தொகை, எண்ணும்மை
ஆ) பண்புத்தொகை, எண்ணும்மை

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



இ) பெயரெச்சம், முற்றும்மை

ஈ) உவமைத்தொகை, உம்மைத்தொகை

11. **சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.**

அ) இவற்றுள் நால் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.

ஆ) உ.வே.சா. சென்னைப் பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.

இ) கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனப்பாடம் செய்ய வேண்டும்.

ஈ) உ.வே.சா. மகாமகோபாத்தியாய திராவிட வித்தியா பூஷணம் தாக்ஷிணாத்திய கலாநிதி உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றவர்.

12. **பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் என்ற விதிக்கான சான்று**

அ) பூம்பாவாய் ஆ) பெருங்கடல்

இ) உள்ளொன்று ஈ) புதுப்பெயல்

13. **வி.சி. கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர்**

அ) அறிஞர் அண்ணா ஆ) கு.காமராசர்

இ) தந்தை பெரியார் ஈ) மு. கருணாநிதி

14. **தளைத்தல் என்பதற்குப் பொருந்தாத பொருளைக் கண்டறிக.**

அ) கட்டுதல் ஆ) பிணித்தல்

இ) பிரித்தல் ஈ) சிதைத்தல்

**பகுதி - II**

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்கள் சிலவற்றை எழுதுக.

16. தேவாரம் – குறிப்பு வரைக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



17. வறுமையும் சிறுமையும் தருவது எது ?

18. தேயிலைத் தோட்டத்தில் மக்கள் துன்பப்படுவதற்கு முகம்மது இராவுத்தர் கூறும் காரணங்கள் யாவை?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக" - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

20. மல்லியர்பா - விளக்குக.

21. மேலாண்மையில் புலி - பூனை ஒப்பிடுக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

**22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

அடியற்ற மரம் போல

**23.** சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

**24. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக.**

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

**25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

விலை, விளை, விழை

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) பகைத்த ஆ) உண்பார்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக**

அ) Mini meals ஆ) Checkout

**28. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) இனநிரை ஆ) உரனுடை

**30.** மூவசைச்சீர்களைக் குறிப்பிடுக.

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிக் குறிப்பு வரைக.

32. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

34. பரிசில் துறை சான்றுடன் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36. சுவடியை உருவாக்கும் முறையை விவரி.

37. இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை - விளக்குக.

38. வணிக மேலாண்மையைப் பற்றி பட்டினப்பாலை கூறுவனவற்றை விளக்குக.

Padasalai.Net www.TrbTnpsc



## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.

41. உவமையணி (அல்லது)

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். - இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக,

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

அந்தியிருளாற் கருகும் உலகம் கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ? - பாரதிதாசன்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



43. **‘வானம்’** அல்லது **‘பள்ளி’** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும். இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

**(அல்லது)**

ஆ) எண்வகை மெய்ப்பாடுகளை இலக்கியச் சான்றுடன் விளக்குக.

45. அ) மயிலையார் ஓர் “ஆராய்ச்சிப் பேரறிஞர்” என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

**(அல்லது)**

ஆ) சார்லி சாப்ளியின் ‘தி கிரேட் டிக்டேட்டர்’ கதையைச் சுருக்கி வரைக.

46. அ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

1. அ) ‘வையகம் பனிப்ப’ - எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடல்.

ஆ) ‘படும்’ என முடியும் குறள்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. ஆ) 3, 1, 4, 2
2. இ) அடி எதுகை, சீர்மோனை
3. இ) இசைக்கருவி
4. ஈ) தந்தைவழிச் சமூகமுறை
5. அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு.வரதராசனார்
6. ஆ) எழுத்தறிவித்தல்
7. ஆ) சொல்தொடர்நிலைக்கு
8. ஆ) ஒலி விளைவு
9. இ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.
10. ஆ) பண்புத்தொகை, எண்ணும்மை
11. இ) கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனப்பாடம் செய்ய வேண்டும்.
12. அ) பூம்பாவாய்
13. இ) தந்தை பெரியார்
14. அ) கட்டுதல்

### பகுதி - II

15. ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.
16.
   - தேவாரம் – தே + வாரம் – பாமாலை; தே + ஆரம் – பூமாலை.
   - அப்பர், சுந்தரர், சம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்பு.
   - தேவாரம் மொத்தப் பாடல்கள் – 8227.
   - நம் பாடப்பகுதி முதல் மூன்று திருமுறையில் இரண்டாவது திருமுறை சம்பந்தர் பாடிய திருமயிலாப்பூர் பதிகம்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



17. ஒருவருக்கு துன்பம் பல உண்டாக்கி அவருடைய புகழையும் கெடுக்கின்ற சூதுதான் வறுமையும் சிறுமையும் ஆகும்.

18. கல்வி, ஒழுக்கம், நாகரீகம், ஒற்றுமை இவை நான்கும் குறைவதால் தேயிலைத் தோட்டத்தில் துன்பப்படுவதற்கான காரணங்களாக முகம்மது இராவுத்தர் குறிப்பிடுகிறார்.

19. **ஓசை நயமிக்கச் சொற்கள்:**

படாஅம் ஈத்த, கெடாஅ நல்லிசை, கடாஅயானை, நல்லிசை.

**இலக்கணக் குறிப்புகள்:**

- படாஅம், கெடாஅ, கடாஅ – செய்யுளிசையளபெடைகள்,
- ஈத்த – பெயரெச்சம், நல்லிசை – பண்புத்தொகை

20. தொல் பழங்கால மானுட எச்சங்களை உணர்த்தும் பழமையான சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் ‘மல்லியர்பா’ எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

21.
- புலியைப் பூனையைப் போல தொடர்ந்து நடத்தினால் அது பூனையாகவே ஆகிவிடும்.
- புத்திசாலிகள் பூனைகளையும் புலியாக்குவார்கள் அவசரக்காரர்கள் புலிகளையும் எலியாக்குவார்கள் என்பதே புலி – பூனை மேலாண்மைக் கருத்தாகும்.

22. அப்துல் கலாமின் மறைவு இளைஞர்களை அடியற்ற மரம்போல ஆக்கிவிட்டது.

23.
- இரட்டைக்கிளவித் தொடர்கள் – சலசல, கலகல.
- இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.
  - நீர் சல சலவென ஓடியது (தவறு)
  - நீர் சலசலவென ஓடியது (சரி)
  - கல கலவென சிர்த்தாள். (தவறு)
  - கலகலவெனச் சிரித்தாள். (சரி)

24. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



25. கார் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால் தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது.

26. அ) பகைத்த = பகை + த் + த் + அ

பகை- பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

ஆ) உண்பார் = உண் + ப் + ஆர்

உண் -பகுதி, ப் - எதிர்கால இடைநிலை, ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

27. அ) சிற்றுணவு ஆ) வெளியேறுதல்

28. அ) வாழைத்**தோப்பில்** குயில்கள் **கூவிக்**கொண்டும் காகங்கள் **கரைந்து** கொண்டும் இருந்தன.

ஆ) முருகன் சோறு **உண்டு** பால் **பருகினான்**.

29. அ) இனநிரை - இனம் + நிரை

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' என்ற விதிப்படி, மவ்வீறு ஒற்றழிந்து 'இனநிரை' எனப் புணர்ந்தது.

ஆ) உரனுடை - உரன் + உடை

உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி (ன் + உ - னு) உரனுடை எனப் புணர்ந்தது.

30. காய்ச்சீர் - தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய்.

☯☯☯☯☯

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



# மாதிரி வினாத்தாள் - 7

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்டம்
மற்றைய எல்லாம் பிற.

**2. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ................ தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.**

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1-சரி, 2-தவறு ஆ) 1-தவறு, 2-சரி

இ) 1-தவறு, 2-தவறு ஈ) 1-சரி, 2-சரி

**3. அவ்வைக்கு நெல்லிக்கனியை தந்தவன்**

அ) பேகன் ஆ) அதியன்

இ) வாரி ஈ) ஓரி

**4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர்

ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி

இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி

ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2

இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**5. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.**

**கருத்து 2: தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, கருத்து 2 தவறு

**6. 'நெடுங்கணக்கு' என்பது**

அ) நீண்ட கணக்கு ஆ) பெருக்கல் கணக்கு

இ) ஓலைச் சுவடி ஈ) அரிச்சுவடி

**7. வெண்டளை ................. வகை.**

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து

**8. Affidavit – என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**

அ) ஆணை உறுதி ஆவணம்

ஆ) அதிகார எல்லை

இ) சாட்டுரை

ஈ) வாதி

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



9. **பேச்சுத் தமிழில் அமைந்த தொடரை தேர்க.**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

10. **மலரடி - இச்சொற்களுக்குரிய இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.**

அ) வினைத்தொகை ஆ) உவமைத் தொகை

இ) பண்புத்தொகை ஈ) எண்ணும்மை

11. **சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.**

அ) காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை - இத்தொடரில் கலன் உணர்த்தும் பொருள்

ஆ படியில் பயணம் நொடியில் மரணம் எனப் படிக்கட்டின் மேல் எழுதிப் போட்டிருப்பது உங்களுக்குத் தான்

இ) அடடா ! நாள்தோறும் இத்தகைய விபத்துகள் நடப்பது பெருகிக் கொண்டே இருக்கின்றது.

ஈ) ஒரு பொதுவான சாலைவிதி வேண்டும் என்னும் உடன்படிக்கை பாரிஸ் நகரத்தில் 1990-ஆம் ஆண்டு நடந்த முதல் பன்னாட்டுச் சாலை அமைப்பு மாநாட்டில் ஏற்பட்டது.

12. **'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி அமைந்த சொல்**

அ) கொடுங்கோல் ஆ) ஆங்கவற்றுள்

இ) வானமெல்லாம் ஈ) கண்ணுடைய

13. **'எர்லி தமிழ் எபிகிராபி' என்னும் நூலின் ஆசிரியர்**

அ) ஐராவதம் மகாதேவன் ஆ) ஜி.யு. போப்

இ) ஜார்ஜ் எல். ஹார்ட் ஈ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார்

14. **படிமம் என்பதன் பொருள்.**

அ) சொல் ஆ) செயல்

இ) காட்சி ஈ) ஒலி

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnpsc



## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×2=6**

15. “துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது'' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?
அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்.

16. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

17. நாட்டுப்புற இலக்கியங்களின் பாடுபொருள்கள் யாவை?

18. விண்வெளியில் இயங்குவனாகச் சுரதா கூறுவன யாவை?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4**

19. ‘ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

20. நாராசம் என்றால் என்ன?

21. கடலைக் குறிக்கும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14**

**22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

அச்சாணி இல்லாத தேர் போல

**23.** ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

**24. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக**

இறுதி சடங்குச் செய்யப்பட்ட கூடிய மேடைக்கு தன் தந்தையாகிய சடாயுவை பெரியக் கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

தாள், தால் , தாழ்

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) விம்முகின்ற ஆ) ஈந்த

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Visa ஆ) Take off

**28. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

உண்மை, உலகு, சிறப்பு, மதிப்பு

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) வானமெல்லாம் ஆ) அத்திசை

30. தொன்மம் விளக்கம் தருக.

**பகுதி - III**

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

32. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.

33. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

34. வாகைத் திணை சான்றுடன் விளக்குக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?

36. சுவடியை உருவாக்கும் முறையை விவரி.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



37. வெள்ளச் சமவெளி என்றால் என்ன? அதன் பயன் யாது?

38. சென்னை அறிவின் நகரம் என்பதற்குச் சான்று தருக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. தமிழாக்கம் செய்க

A White woman, about 50 years old, was seated next to a black man. Obviously disturbed by this, she called the air -hostess. "Madam, what is the matter?" the hostess asked. "You placed me next to a black man. Give me an alternative seat". The hostess replied. "Almost all the places on this flight are taken. I will go to see if another place is available. The hostess went away and came back a few minutes later. "Madam, just as I thought, there are no other available seats in the economy class. We still have one place in the first class".

Before the woman could say anything, the hostess continued. "It would be scandalous to make someone sit next to someone so disgusting". She turned to the black guy and said, " Sir, a seat awaits you in the first class". At the moment, the other passengers who were shocked by what they had just witnessed stood up and applauded. Take a lesson from the sun who shines his light on everyone. Or the rain that falls on every single shore. No distinction of our race or the colour of our face. Nature's gifts are there for all men rich or poor. (Courtesy: S.S.S. Bal Vikas)

41. எடுத்துக்காட்டு உவமையணி (அல்லது)
தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. - இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக,

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



42. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே. - மொழி வரலாறு (மு. வரதராசனார்)

43. **'குழந்தை'** அல்லது **'கடல்'** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) அகநானூற்றுப் பாடல் வழியாகத் தலைமகன் பாங்கற்கு உரைத்த செய்தியை விளக்குக.

**(அல்லது)**

ஆ) "அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும்" என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு விளக்குக.

**(அல்லது)**

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



46. அ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 1×6(4+2)=6

1. அ) 'குழல்வழி நின்றது' - எனத் தொடங்கும் 'சிலப்பதிகாரம்' என்ற பாடல்.

ஆ) 'அரண்' என முடியும் குறள்.

☯☯☯☯☯

## விடைக் குறிப்புகள்

## பகுதி - I

1. ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.
2. ஈ) 1-சரி, 2-சரி
3. ஆ) அதியன்
4. இ) 2, 4, 1, 3
5. இ) இரண்டு கருத்தும் சரி
6. ஈ) அரிச்சுவடி
7. அ) இரண்டு
8. அ) ஆணை உறுதி ஆவணம்
9. அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
10. ஆ) உவமைத் தொகை
11. இ) அடடா! நாள்தோறும் இத்தகைய விபத்துகள் நடப்பது பெருகிக் கொண்டே இருக்கின்றது.
12. இ) வானமெல்லாம்
13. அ) ஐராவதம் மகாதேவன்
14. இ) காட்சி

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## பகுதி - II

15. நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்ற பழமொழிக்கு இப்பாடலடிகள் பொருந்தும்.

**விளக்கம்:**

குகனின் வருத்தத்தை உணர்ந்த இராமன் கூறியது. துன்பம் என்று ஒன்று இருந்தால் இன்பம் என்பது புலப்படும் – என்பதே பொருத்தம்.

16. அறத்தின் வழியாக இல்லற வாழ்க்கை வாழ்பவர் முயல்வாருள் எல்லாம் தலையானவர்.

17. செவ்வியல் இலக்கிய மரபைப் பாடாத, சொல்லாத அல்லது புறக்கணித்த கருப்பொருள்களைப் பாடு பொருளாகக் கொண்டு பாடப்பட்டது நாட்டுப்புற இலக்கியங்கள்.

18. வெண்மதி (வெண்ணிலவு) செங்கதிரோன் (சூரியன்) முகில் (மேகம்)

19. 
- மழைக்கு ஆதாரம் மரம்.
- உயிர்வளிக்கு உதவுவது மரம்.
- மண் அரிப்பைத் தடுக்கும் மரம்.
- மரம் தரும் நிழல் குளிர்ச்சி என்று கூறுவேன்.

20. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள் அதற்கு 'நாராசம்' என்று பெயர்.

21. அரலை, அலை, அழுவம், அளம், அளக்கர், ஆர்கலி, அரி, உவரி, திரை, பானல், பெருநீர், சுழி, நீராழி, புணர்ப்பு, ஆழி, ஈண்டு நீர், தென்நீர், பௌவம், முந்நீர், வரி, ஓதம், வலயம்.

22. நாட்டை வழி நடத்த சரியான தலைவன் இல்லாததால் நாட்டு மக்கள் அச்சாணி இல்லாத தேர் போல சரிவர இயங்காமல் தவிக்கின்றனர்.

23. 
- வெண்பாவில் நான்கடிகளும் ஓரெதுகையும் பெற்று வருவது ஒரு விகற்பம் ஆகும்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



- வெண்பாவில் முதல் இரண்டடி ஓரெதுகையும், அடுத்த இரண்டடி ஓரெதுகையும் பெற்று வருவது பல விகற்பம் ஆகும்.

24. இறுதிச் சடங்கு செய்யப்பட**க்** கூடிய மேடைக்கு**த்** தன் தந்தையாகிய சடாயுவை**ப்** பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.

25. **தாலை** ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு என்றும் ,இறைவன் **தாள்** சேர்ந்தாருக்குக் கவலை இல்லை என்றும், ஆசிரியர் சொல்லைக் கேட்டு **தாழ்ந்து** நட என்று சான்றோர்கள் கூறினர்.

26. அ) விம்முகின்ற = விம்மு + கின்று + அ
   விம்மு - பகுதி, கின்று - நிகழ்கால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

   ஆ) ஈந்த = ஈ + த்(ந்) + த் + அ
   ஈ - பகுதி, த் - சந்தி ('ந்' ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

27. அ) நுழைவு இசைவு ஆ) வானூர்தி கிளம்புதல்

28. உண்மை பேசுபவர்களுக்கு உலகு என்றும் சிறப்பும் மதிப்பும் அளிக்கும்.

29. அ) வானமெல்லாம் = வானம் + எல்லாம்
   உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்ற விதிப்படி, (ம் + எ = மெ) வானெமல்லாம் எனப் புணர்ந்தது.

   ஆ) அத்திசை = அ + திசை
   இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்ற விதிப்படி அத்திசை என்று புணர்ந்தது.

30. - சமய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் வெளிப்படுத்துகின்றன.
   - உவமைக் கதைகளாகவும், மெய்யியல் உருவங்களாகவும் நின்று சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்றன.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



# மாதிரி வினாத்தாள் - 8

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. ஆர்ப்பரிக்கும் கடல் அதன் அடித்தளம் மௌனம்; மகாமௌனம் - அடிகள் புலப்படுத்துவது**

அ) இரைச்சல்

ஆ) குறைக்கும் கூத்தாடும்

இ) நிரைகுடம் நீர்தளும்பல் இல்

ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.

**2. இரட்சணிய யாத்திரிகத்தின் பாடல்கள்**

அ) 3566 ஆ) 3677

இ) 3766 ஈ) 3244

**3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்**
**கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை**
**வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்**
**நினைப்ப வருவதொன் றில்**

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnpsc



அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று சூழினும் தான்முந்து உறும்.

4. **கருத்து 1 : முல்லைக்கலியில் எருதுகளின் பல இனங்களைக் காட்டும் சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.**

**கருத்து 2 : சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.**

அ) கருத்து 1 தவறு ஆ) கருத்து 1 சரி, 2 தவறு

இ) கருத்து இரண்டும் சரி ஈ) கருத்து 1 தவறு, 2 சரி

5. **இந்தியாவின் முதல் பொதுநூலகம்**

அ) சரசுவதிமகால் நூலகம் ஆ) கொல்கத்தா நூலகம்

இ) கன்னிமாரா நூலகம் ஈ) திருவனந்தபுரம் நூலகம்

6. **உலகச் சுற்றுச்சூழல் நாள்**

அ) ஜூன் 5 ஆ) ஜூலை 5

இ) ஏப்ரல் 14 ஈ) மே 5

7. **வெண்சீர் வெண்டளை என்பது**

அ) காய் முன் நேர் ஆ) மா முன் நிரை

இ) மா முன் நேர் ஈ) விளம் முன் நிரை

8. **Arrival – என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**

அ) வருகை ஆ) கடவுச்சீட்டு

இ) புறப்பாடு ஈ) நுழைவு இசைவு

9. **“உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே”**
**- இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்**

அ) நன்னூல் ஆ) அகத்தியம்

இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



10. **'பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென' - **தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு**
அ) வினைத் தொகை
ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர்
ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

11. **சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.**
அ) அடடா நாள்தோறும் இத்தகைய விபத்துகள் நடப்பது பெருகிக் கொண்டே இருக்கின்றது.
ஆ) ஒரு பொதுவான சாலைவிதி வேண்டும் என்னும் உடன்படிக்கை பாரிஸ் நகரத்தில் 1990-ஆம் ஆண்டு நடந்த முதல் பன்னாட்டுச் சாலை அமைப்பு மாநாட்டில் ஏற்பட்டது.
இ) விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி தன்னுடைய தகுதியை அறியானோ
ஈ) உ.வே.சா. 'மகாமகோபாத்தியாய', 'திராவிட வித்தியா பூஷணம்', 'தாக்ஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றவர்.

12. **'ஈறுபோதல்' என்னும் விதிப்படி அமைந்த சொல்**
அ) செந்தமிழ் ஆ) ஆங்கவற்றுள்
இ) வானமெல்லாம் ஈ) கண்ணுடைய

13. **தலைக்குளம் கதையின் கருப்பொருள்**
அ) கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர் நகரமாக மாறியதைப் பற்றிப் பேசுவது.
ஆ) தனக்கு உதவி செய்த மனிதனை தேடிக் கண்டுபிடித்து நன்றி பாராட்டுவது.
இ) பெண்களின் அவலநிலையும் ஆண்களின் அடக்குமுறையும்.
ஈ) இறந்து போன மனிதனின் சிறப்புகளைப் பேசுவது.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**14. தவறான இணையைத் தேர்க:**

| **பாவகை** | | **இலக்கியம்** |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள் வெண்பா | - | திருக்குறள் |

**பகுதி - II**

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

16. 'இடையீடு' - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

17. 'கூதிர்ப்பாசறை' என்றால் என்ன?

18. திருவருட்பா - குறிப்பு வரைக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.

20. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.

21. சட்டம் , தூக்கு இவை எவற்றை உணர்த்துகின்றன?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

**22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

அச்சாணி இல்லாத தேர் போல

**23.** ஈரசைச் சீர்களைக் குறிப்பிடுக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**24. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக.**

ஊர்திகளுக்கு காப்பீடு இல்லாமல் இயக்கினால் ரூ.2000 தண்ட தொகைக் கட்ட வேண்டும்.

**25. விடைக் கேற்ற வினா அமைத்து எழுதுக:**

அ) 1865ல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

ஆ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) நினைக்கின்ற ஆ) வைத்து

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக**

அ) Demand Draft ஆ) Debit Card

**28. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

அ) கல்வி கரையில............

ஆ) கல்லாரே ஆயினும் .................

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) செல்லிடத்து ஆ) பூம்பாவாய்

**30.** படிமம் என்றால் என்ன?

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

32. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் கருதுவன யாவை?

33. அகநானூறு – குறிப்பு வரைக.

34 ‘கூதிர்ப்பாசறை’ துறையைச் சான்றுடன் விளக்குக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

37. சுவடியை உருவாக்கும் முறையை விவரி.

38. சென்னையின் பழமை, அறிவுப் புரட்சி போன்றவற்றை சான்றுடன் நிறுவுக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. ‘எறும்பு ஊரக் கல்லும் தேயும்’ என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya’s first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformed the lives of tens of thousands of women through sustainable social forestry schemes.

41. உவமையணி (அல்லது)

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர். - இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக,

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnpsc



42. கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக.

"எனக்கு சில்க் சட்டை இருக்கே! உனக்கு இருக்கா!'' என்று கெட்டிக்காரத்தனமாகக் கேட்டான் ராமசாமி. செல்லையா பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தான்; தம்பையா ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தான்.; மங்கம்மாள் முக்கின்மேல் ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டும் கண்ணை இலேசாக மூடிக்கொண்டும் யோசனை செய்தாள். அந்த மூவரும் ராமசாமியின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் மற்ற பிள்ளைகள். அன்று பள்ளிக்கூடத்திலிருக்கும்போது ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் இடையே ஒரு போட்டி நடந்தது. ராமசாமி தன் 'ஐந்தாம் வகுப்பிற்குரிய இந்தியதேச சரித்திர'ப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டான். செல்லையா அந்த வருஷம் இந்தியதேச சரித்திரம் வாங்கவில்லை; அதனால் தன்னிடமுள்ள ஒரு சிவிக்ஸ் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான். இருவரும் 'படப்போட்டி'யை ஆரம்பித்து விட்டார்கள்.

– 'ராஜா வந்திருக்கிறார்', கு. அழகிரிசாமி

43. **'மழை'** அல்லது **'தென்றல்'** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக.

**(அல்லது)**

ஆ) அதியமான் நெடுமான் அஞ்சியின் பரிசு நீட்டித்தல் குணம் தவறு என்பதை ஔவையாரின் புறநானூற்றுப் பரிசில் துறை பாடல் எங்ஙனம் உணர்த்துகிறது?

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnpsc



45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு விளக்குக.

**(அல்லது)**

ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

1. அ) 'வையகம் பனிப்ப' - எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடல்.

ஆ) 'படும்' என முடியும் குறள்.

Padasalai.Net

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.
2. இ) 3766
3. ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.
4. இ) கருத்து இரண்டும் சரி
5. இ) கன்னிமாரா நூலகம்
6. அ) ஜூன் 5
7. அ) காய் முன் நேர்
8. அ) வருகை
9. இ) தொல்காப்பியம்
10. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
11. ஈ) உ.வே.சா. 'மகாமகோபாத்தியாய', 'திராவிட வித்தியா பூஷணம்', 'தாக்ஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றவர்.
12. அ) செந்தமிழ்
13. அ) கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர் நகரமாக மாறியதைப் பற்றிப் பேசுவது.
14. அ) விருத்தப்பா – நாலடியார்

### பகுதி - II

15. உவமை : ஒருவரின் எளிய தோற்றத்தைக் கண்டு இகழக் கூடாது.

உவமேயம் : பெரிய தேருக்குச் சிறிய அச்சாணி இன்றியமையாதது.

பொருத்தம் : சிறிய அச்சாணிதான் என்று எளிமையாக எண்ணக் கூடாது. அதுபோல ஒருவரின் தோற்றத்தை வைத்து எளிமையாக எண்ணக்கூடாது.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



16. இடையீடு என்ற கவிதை, கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம், அதனை வெளிப்படுத்தும் வண்ணம், எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை போன்றவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது.

17. கூதிர்ப்பாசறை என்பது போர்மேற்கொண்ட அரசன் குளிர்காலத்தில் தாங்கும் படைவீடாகும்.

18. • திருவருட்பா என்பது வள்ளலார் பாடிய பாடல்களின் தொகுப்பு.
- திருவருட்பா - 5818 பாடல்கள்.
- பா - ஆசிரியவிருத்தம்.
- தொகுப்பு - ஆறு திருமுறை.
- பாடப்பகுதி -ஐந்தாம் திருமுறை - தெய்வமணிமாலை.

19. • மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.
- மனிதன் இயற்கை வளங்களைச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான்.

20. **புக்கில்:**

'புக்கில்' என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

**தன்மனை:**

திருமணத்திற்குப் பின் கணவனும், மனைவியும் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் 'தன்மனை' என அழைக்கப்பட்டது.

21. **சட்டம்:**

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக வர தினமும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாங்கள் மேலே எழுதி அதைப் போன்று எழுதி வரச் சொல்வர். இதற்குச் 'சட்டம்' என்று பெயர்.

**தூக்கு:**

- சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் பயன்படும் கருவிக்குத் 'தூக்கு' என்று பெயர்.
- இதற்கு 'அசை' என்ற வேறு பெயரும் உண்டு.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



22. நாட்டை வழி நடத்த சரியான தலைவன் இல்லாததால் நாட்டு மக்கள் அச்சாணி இல்லாத தேர் போல சரிவர இயங்காமல் தவிக்கின்றனர்.

23. • மாச்சீர் - தேமா, புளிமா
    • விளச்சீர் - கூவிளம், கருவிளம்.

24. ஊர்திகளுக்குக் காப்பீடு இல்லாமல் இயக்கினால் ரூ.2000 தண்டத் தொகை கட்ட வேண்டும்.

25. அ) தென்னிந்தியாவில் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு எப்போது அமைக்கப்பட்டது.
    ஆ) குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

26. அ) நினைக்கின்ற = நினை + க் + கின்று + அ
    நினை - பகுதி, க் - சந்தி, கின்று - நிகழ்கால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.
    ஆ) வைத்து = வை + த் + த் + உ
    வை - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

27. அ) கேட்பு வரைவோலை    ஆ) பற்று அட்டை

28. அ) கற்பவர்    ஆ) கற்றாரைச்

29. அ) செல்லிடத்து = செல் + இடத்து
    • 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்ற விதிப்படி, செல் + ல் + இடத்து என்றாகியது.
    • உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவதே இயல்பு என்ற விதிப்படி, ல் + இ = லி = செல்லிடத்து என்று புணர்ந்தது.
    ஆ) பூம்பாவாய் = பூ + பாவாய்
    பூப்பெயர் முன் இனமென்மை தோன்றும் என்ற விதிப்படி பூம்பாவாய் எனப் புணர்ந்தது.

30. • படிமம் என்பது காட்சி என்பது பொருள்.
    • காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி.

☯☯☯☯☯

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



# ● மாதிரி வினாத்தாள் - 9 ●

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. பொருத்திக் காட்டுக.**

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1. சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2. ஞாலத்தின் மாணப் பெரிது

இ) சினம் என்னும் - 3. தெய்வத்துள் வைக்கப்படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4. நன்மை கடலின் பெரிது

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2

இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

**2. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு**

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு

இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

**3. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

**மனமோ மாட்டுவண்டி பாதையொழுங்கில் போக நினைக்கும்**

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**மாடு இப்படி இருந்தால் எப்படி நகரும் வாழ்க்கைச் சக்கரம் ஊர் போகும் பாதையில் சக்கரம் உருண்டால் அதுவே அறிவு; அதுவே தெளிவு.**

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

இ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

4. **வேறுபட்டதைக் குறிப்பிடுக.**

அ) அண்மைக் காட்சித் துணிப்பு

ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு

இ) நடுக்காட்சித் துணிப்பு

ஈ) காட்சி மறைவு

5. **கருத்து : தொன்மையான மொழி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.**

**விளக்கம் : மொழித்தோன்ற அடிப்படையாக இருப்பது ஒலியே. ஒலியை வெவ்வேறு வடிவங்களில் உச்சரிக்கும் போது மொழித் தோன்றுகிறது.**

அ) கருத்து சரி விளக்கம் தவறு

ஆ) கருத்தும் விளக்கமும் சரி

இ) கருத்து தவறு விளக்கமும் தவறு

ஈ) கருத்து தவறு விளக்கம் சரி

6. **'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' என்று குதிரைகள் இறக்குமதி பற்றிக் குறிப்பிடும் நூல்**

அ) பரிபாடல் ஆ) பட்டினப்பாலை

இ) பதிற்றுப்பத்து ஈ) புறநானூறு

7. **'விளங்கி' – இச்சொல்லின் சரியான பகுபதஉறுப்பிலக்கண பிரிப்பு**

அ) விள + ங் + இ ஆ) விளங்கு + க் + இ

இ) வி + ளங்கு + இ ஈ) விளங்கு + இ

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



8. **Debit Card – என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**
அ) பற்று அட்டை ஆ) கேட்பு வரைவோலை
இ) திரும்பப் பெறல் படிவம் ஈ) விரைவுக் காசாளர்

9. **வெண்பாவின் ஓசை**
அ) அகவலோசை ஆ) செப்பலோசை
இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

10. **உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்**
அ) உண்டு ஆ) பிறந்து
இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

11. **சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.**
அ) இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.
ஆ) ஒருவன் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும் காக்காவிட்டால் சினம் நம்மையே அழித்துவிடும்
இ) இவற்றுள் 'நால்' என்பது நாலடியாரையும் 'இரண்டு' என்பது திருக்குறளையும் குறிக்கும்.
ஈ) உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன்.

12. **உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் ' என்னும் விதிப்படி அமைந்த சொல்**
அ) செந்தமிழ் ஆ) வகுத்தன
இ) வானமெல்லாம ஈ) கண்ணுடைய

13. **வம்சமணி தீபிகை என்னும் நூல் யாரைப் பற்றியது?**
அ) சோழ மன்னர்களின் பரம்பரை வரலாறு
ஆ) எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு
இ) ஆங்கில ஆட்சியாளரின் அடக்குமுறைகளைக் கூறுவது
ஈ) பாரதியின் வாழ்ககை வரலாற்றைக் கூறுவது

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**14. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.**

அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?

16. கற்றவர்க்கு எங்கு சென்றாலும் உணவு கிடைக்கும் என்பதற்கு ஒளவையார் கூறும் உவமை யாது?

17. தலைக்கோல் பட்டம் பெற்றவள் யார்? ஏன்?

18. ஆற்றுப்படை என்பது யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக

20. ‘வேத்தான்’ - இச்சொல்லால் அழைக்கப்பட்டவர் யார்? இதன் பொருள் என்ன?

21. சென்னை - ஓர் காட்டுமரம் விளக்குக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

**22. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச் சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுது.**

அ) அனாதை ............... (இல்லம்) சென்று இனிப்புகள் வழங்கினேன்.

ஆ) வெற்றிபெற்ற ............... (மாணவர்கள்) பரிசுகள் வழங்கப்பட்டன.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



23. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

24. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக.**

பரிசிலர்க்கு சிறுவரும், கல்விக்கு கோடரியும், போகும் திசைக்கும் காடும், உணவுக்கு காட்டில் உள்ள மரங்களும் உவமைகள்.

25. **பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

அ) அன்பே ............... (ஆர்வமாய் / தகளியாய்)

ஆ) வான்மழை .................. (தூறலில் / பொழிந்திடின்)

26. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) சாற்றி ஆ) தந்தனன

27. **கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Rough Draft ஆ) Route Book

28. **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

அ) அகலக்கால் ஆ) வழிவழியாக

29. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) செல்லிடத்து ஆ) பெருந்தேர்

30. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.

32. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



33. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

34. செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்கு.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

36. பேரிடர் வந்துவிட்டால் மேற்கொள்ள வேண்டியவை யாவை ?

37. சென்னை நகராட்சி, மாகாணம் உருவான அமைப்பை விளக்குக.

38. ஷேக்ஸ்பியரின் நாடகம் வழி ஔவையாரின் நல்வழியை ஒப்பிட்டு நிதி மேலாண்மையை விளக்குக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க**

1. A new language is a new life
2. If you want people to understand you, speak their language.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.

41. ஏகதேச உருவக அணி (அல்லது)
அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது' - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

42. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக.**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



உள்ளிட்டவையே பல்வேறு உடல் நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல்நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ‘உணவே மருந்து மருந்தே உணவு’ என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும். ருசிக்காக, சாப்பிடக்கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும் தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. பொதுவாகவே உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப்பொருள் செரிமானமாவதற்கு உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும். உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும். நமது எடை மற்றும் உயரத்தினை அவ்வப்போது சோதித்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானது. பிறகு தங்களது எடை மற்றும் உயரத்தினைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் முடிவெடுக்க வேண்டும். ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும் இடம், பருவ நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஊட்டச்சத்துக்களின் தேவை மாறுபடும். தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

43. **‘பள்ளி’** அல்லது **‘நட்பு’** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3×6=18

44. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும்' நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

**(அல்லது)**

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 1×6(4+2)=6

1. அ) 'துன்பு உளது எனின்' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

ஆ) 'வரும்' என முடியும் குறள்.

☯☯☯☯☯

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. ஆ) 3, 4, 1, 2
2. இ) முரண்பண்பு
3. ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு.
4. ஈ) காட்சி மறைவு
5. ஆ) கருத்தும் விளக்கமும் சரி
6. ஆ) பட்டினப்பாலை
7. ஈ) விளங்கு + இ
8. அ) பற்று அட்டை
9. ஆ) செப்பலோசை
10. இ) வளர்ந்த
11. இ) இவற்றுள் ‘நால்’ என்பது நாலடியாரையும் ‘இரண்டு’ என்பது திருக்குறளையும் குறிக்கும்.
12. ஆ) வகுத்தன
13. ஆ) எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு
14. ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

### பகுதி - II

15. ஒருவரிடம் இருக்கும் செல்வம் குறையாமலிருக்க வேண்டுமென்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாமல் இருத்தல் வேண்டும்.

16. 
- மரம் வெட்டும் தச்சர் பெற்ற சிறுவர்கள் தங்கள் மழுவோடு (கோடாரி) காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்டுவதற்கு மரம் கிடைக்காமல் போகுமா? என்பதே உவமை.
- பரிசிலருக்குச் சிறுவரும், கல்விக்குக் கோடரியும், போகும் திசைக்குக் காடும், உணவிற்குக் காட்டில் உள்ள மரங்களும் உவமைகளாகும்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



17. • தலைக்கோல் பட்டம் பெற்றவள் மாதவி.
    • தன் ஆடல் அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடித்ததன் காரணமாகச் சிறப்பிக்கப்பட்டது.
18. • ஆறு + படை = ஆற்றுப்படை வழிபடுத்தல் என்பதன் பொருளாகும்.
    • பரிசில் பெற்ற பாணன் பரிசில் பெற போகும் பாணனைக் கண்டு வழிபடுத்தல்.
19. • நடைபெற்றியலும் என்றும் நடை நவின்றொழுகும் என்ற சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
    • கவிதையின் இயங்காற்றல்தான் நடை என்கிறது தொல்காப்பியம்.
    • மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதே நடை எனப்படும்.
20. • பள்ளிக்கூடத்திற்குக் காலை 5 மணிக்கே வரவேண்டும்.
    • பள்ளிக்கூடத்திற்கு முதலிலே வரும் மாணாக்கரே 'வேத்தான்' என்று அழைக்கப்பட்டார்.
    • மற்றவர்களை விட வேறான தனிப்பெருமை உடையவன் என்பதே 'வேத்தான்' என்பதன் பொருள்.
21. இந்தியாவில் மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடித்தளமாகவும், அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரம் மதராசப்பட்டினம். அது இன்று பரப்பரப்பான சென்னை மாநகரமாக வளர்ந்திருக்கிறது. திட்டமிட்டு உருவாக்கப்படாத இந்நகரம் காட்டுமரம் போல் தன் மனம் போன போக்கில் வளர்கிறது. அதனால் சென்னை ஓர் காட்டுமரம் என்பது சாலப் பொருந்தும்.
22. அ) இல்லத்துக்குச் ஆ) மாணவர்களுக்குப்
23. • 'திருவளர் செல்வன்' என்பதே சரியான தொடராகும்.
    • திருவளர் செல்வன் என்பது வினைத்தொகை.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



- வினைத்தொகைக்கு சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது என்ற இலக்கண விதியின் படி திருவளர்செல்வன் என்பதே சரியான தொடராகும்.

24. பரிசிலர்க்குச் சிறுவரும், கல்விக்குக் கோடரியும், போகும் திசைக்குக் காடும், உணவுக்குக் காட்டில் உள்ள மரங்களும் உவமைகள்.

25. அ) தகளியாய் ஆ) தூறலில்

26. அ) சாற்றி = சாற்று + இ
சாற்று - பகுதி, இ - வினையெச்ச விகுதி

ஆ) தந்தனன் = தா(த) + த் + த் + அன் + அன்
தா - பகுதி (த எனக் குறுகியது விகாரம்), த்(ந்) - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, அன் - சாரியை, அன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

27. அ) முதல்வரைவு ஆ) சாலைச்சுவடி

28. **அகலக்கால்** : பின்வரும் விளைவுகளை யோசிக்காமல் 'அகலக்கால்' வைத்தால் துன்பம் நேரிடும்.

**வழிவழியாக** : சோழமன்னர்களின் ஆட்சி வழிவழியாக அவருடைய வாரிசுகளே ஆண்டு வந்துள்ளனர்

29. அ) செல்லிடத்து = செல் + இடத்து
- 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்ற விதிப்படி, செல் + ல் + இடத்து என்றாகியது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவதே இயல்பு என்ற விதிப்படி, ல் + இ = லி = செல்லிடத்து என்று புணர்ந்தது.

ஆ) பெருந்தேர் – பெருமை ஞ தேர்
- ஈறுபோதல் என்ற விதிப்படி, மை விகுதி கெட்டு பெரு + தேர் என்றானது.
- இனமிகல் என்ற விதிப்படி, பெருந்தேர் எனப் புணர்ந்தது.

30. இந்தா போறான் தருமன்
கர்ணன் தோற்றான் போ

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



# மாதிரி வினாத்தாள் - 10

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. ‘விளியறி ஞமலி’ – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?**

அ) எருது ஆ) குதிரை

இ) நாய ஈ) யாழி

**2. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்**

அ) ஆய் அண்டிரனும் அதிகனும்

ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும்

ஈ) பாரியும் காரியும்

**3. பரிசில் துறை என்பது**

அ) பரிசு வேண்டி வாயிலில் நிற்பது

ஆ) மன்னன் பரிசளித்துப் புலவரைப் பாராட்டுவது

இ) பரிசு பெற்ற புலவன் மகிழ்ச்சியாக இல்லறம் திரும்புவது

ஈ) இவற்றில் எதுவுமில்லை.

**4. உலகப் புவி நாள்**

அ) ஏப்ரல் 21 ஆ) ஏப்ரல் 22

இ) ஜூன் 21 ஈ) ஜூலை 22

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**5. 'சட்டாம்பிள்ளை' என்பவர் யார்?**

அ) ஊரில் பெரியவர்
ஆ) சண்டித்தனம் செய்பவர்
இ) தலைமை வகிக்கும் மாணவர்
ஈ) பிடிவாதம் பிடிக்கும் மாணவர்

**6. தமிழக அரசின் முதல் பரிசைப் பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமியின் நூல்**

அ) நுண்கலைகள்
ஆ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்
இ) இசைவாணர் கதைகள்
ஈ) பௌத்தமும் தமிழும்

**7. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) மாச்சீர் | - | 1. கருவிளம், கூவிளம் |
| ஆ) காய்ச்சீர் | - | 2. நாள், மலர் |
| இ) விளச்சீர் | - | 3. தேமாங்காய், புளிமாங்காய் |
| ஈ) ஓரசைச்சீர் | - | 4. தேமா, புளிமா |

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2
இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

**8. Abstract – என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**

அ) சுருக்கம் ஆ) சம்பளப்பட்டி
இ) கலைக்கழகம் ஈ) முதல்வரைவு

**9. சரியானதைத் தேர்க.**

அ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.
ஆ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
இ) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

**10. உலகு - இச்சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.**

அ) வினைத்தொகை ஆ) உவமைத் தொகை
இ) பண்புத்தொகை ஈ) இடவாகு பெயர்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**11. EPOS என்னும் கிரேக்கச் சொல்லின் பொருள்**

அ) சொல் அல்லது பாடல்

ஆ) எழுத்து அல்லது கவிதை

இ) வாக்கியம் அல்லது வரலாறு

ஈ) பக்தி அல்லது பண்பாடு

**12. இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசத மிகும்' என்னும் விதிப்படி அமைந்த சொல்**

அ) செந்தமிழ் ஆ) வகுத்தன

இ) எத்திசை ஈ) கண்ணுடைய

**13. தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர்**

அ) கே.வி. சுப்பிரமணியனார்

ஆ) ஐராவதம் மகாதேவன்

இ) தி.வை. சதாசிவ பண்டாரத்தார்

ஈ) இவர்களில் எவருமில்லை

**14. 'திட்டம்' என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?**

அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை

இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. நக்கீரர் சிறுகுறிப்பு வரைக.

16. புறநானூற்றுப் பாடல்களால் அறியப்படுவன யாவை?

17. பாரதியார் இளங்கோவையும், சிலம்பையும் எங்ஙனம் புகழ்கிறார்?

18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19. ஒலிப்பின்னல் என்பது யாது?

20. 'விரிந்த குடும்ப முறை' என்பது யாது ?

21. மயிலையார் ஆய்வு செய்த பணிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

22. **கீழ்க்காணும் நான்கு சொற்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

சருகு, விழு, மண், அலை

23. **பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்

ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்

24. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கியும் எழுதுக.**

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

25. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

அ) முன் ஆ) தானே

26. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) தாங்கிய ஆ) அறிந்து

27. **கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக**

அ) Cinematography ஆ) Departure

28. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

அ) தாமரை ஆ) கோவில்

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) நன்றல்லது ஆ) நன்மொழி

**30.** உள்மனம் ஒரு பாற்கடல் அதைக் கடைந்தால் அமுதம் மட்டுமல்ல ஆலகாலமும் வெளிப்படும் என்பதை நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31. தன்னேர் இலாத தமிழின் சிறப்புக் குறித்துத் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்தும் செய்தி யாது ?

32. 'இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' என்று இராமன் கூறக் காரணம் என்ன?

33. 'மூன்றான காலம் போல் ஒன்று'' எவை? ஏன்? விளக்குக.

34. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' - இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. பேராசிரியர் அ.கா.பெருமாள் அவர்கள் யாரெல்லாம் திண்ணை பள்ளியில் கல்விக்கற்றவர்கள் என்று பட்டியலிடுகின்றார்?

37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38. மேலான மேலாண்மை என்பது என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. 'இளங்கன்று பயமறியாது' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



40. **தமிழாக்கம் செய்க.**

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

41. தொழில் உவமை அணி (அல்லது)
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம். - நாமக்கல் கவிஞர்

43. **'தென்றல்'** அல்லது **'மழை'** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

**பகுதி - IV**

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



**(அல்லது)**

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு விளக்குக.

**(அல்லது)**

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

**பகுதி - V**

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 1×6(4+2)=8

1. அ) 'விண்வேறு: விண்வெளியில் இயங்குகின்ற' - எனத் தொடங்கும் 'இதில் வெற்றி பெற' என்ற பாடல்

ஆ) 'சினம்' என முடியும் குறள்.

## விடைக் குறிப்புகள்

**பகுதி - I**

1. இ) நாய்
2. ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
3. ஆ) மன்னன் பரிசளித்துப் புலவரைப் பாராட்டுவது
4. ஆ) ஏப்ரல் 22
5. இ) தலைமை வகிக்கும் மாணவர்
6. ஆ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்
7. ஆ) 4, 3, 1, 2
8. அ) சுருக்கம்
9. ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



10. ஈ) இடவாகு பெயர்
11. அ) சொல் அல்லது பாடல்
12. இ) எத்திசை
13. ஆ) ஐராவதம் மகாதேவன்
14. இ) திட்டம்

## பகுதி - II

15. • மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரர்.
    • இறையனார் களவியலுக்குச் சிறந்த உரைதந்தவர்.
    • கபிலர், பரணர் காலத்தவர்.
    • 188 அடிகளை உடையை 'நெடுநல்வாடை' என்ற நூலை இயற்றியவர்.
16. தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை.
17. 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று பாரதி இளங்கோவையும், சிலம்பையும் புகழ்கிறார்.
18. எனக்குள்ளே என்னைத் தொலைத்தக் காரணத்தால் என் முகவரியற்று போனது என்கிறார்.
19. • மொழிசார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.
    • ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
    • இதனையே அந்தப் பனுவலின் பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.
20. தனிக்குடும்ப அமைப்பில் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன்வாழ்வது 'விரிந்த குடும்ப முறை' எனப்படும்.
21. சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழி ஆய்வு.
22. • காய்ந்த இலைச்சருகுகள் மண்ணில் கிடந்தன. மண்ணில் கிடந்த சருகுகள் அலைபோல அசைந்தன.
23. அ) நிலத்தை உழுதால்தான் வயிறு நிறையும்.

    ஆ) இரவு சித்தப்பாவை காவலுக்குப் போகச் சொல்.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.

Padasalai.Net www.TrbTnps



24. "இளங்கோ அடிகள் சாத்தனாரிடம்" முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களேஅவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

25. அ) அவன் முன்வந்து கூறினான்.
அவன்முன் வந்து கூறினான்.

ஆ) அவன்தானே செய்தான்.
அவன் தானே செய்தான்.

26. அ) தாங்கிய = தாங்கு + இ(ன்) + ய் + அ
தாங்கு - பகுதி, இ(ன்) - இடைநிலை 'ன்' புணர்ந்து கெட்டது, ய் - உடம்படுமெய், அ - பெயரெச்ச விகுதி

ஆ) அறிந்து = அறி + த்(ந்) + த் + உ
அறி - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்),
த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

27. அ) ஒளிப்பதிவு ஆ) புறப்பாடு

28. அ) தாமரை
தடாகத்தில் தாமரை மலர்ந்திருந்தன.
தாவுகின்ற மானை(மரை)ப் பிடிக்க முடியாது.

ஆ) கோவில்
கோவிலில் குடமுழுக்கு நடந்தேறியது.
அரசன் உறைவிடம் கோ இல் எனப்படும்.

29. அ) நன்றல்லது = நன்று + அல்லது
- 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி. நன்ற் + அல்லது என்றானது
- 'உடல்மேல் உயர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, (ற் + அ = ற) 'நன்றல்லது' என்று புணர்ந்தது.

ஆ) நன்மொழி = நன்மை + மொழி
ஈறுபோதல் என்ற விதிப்படி மை கெட்டு நன்மொழி என்று புணர்ந்தது.

30. 
- தொன்மங்கள் முரண்பட்டவை.
- ஒன்று சேர்ந்திருக்கிற சூழலை விளக்கப் பயன்படுகின்றன.
- இப்பாடலில் பாற்கடல், அமுதம், ஆலகாலம் ஆகிய தொன்மங்கள் வெளிப்படுகின்றன.

d Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.